www.padippakam.com

பிரசுரம்:14

## பண்டாரவல படுகொலை:

# சிறிலங்கா அரசை விசாரணைக் கூண்டில் ஏற்றுக!

தமிழ் அரசியல் கைதிகளும், "புனர்வாழ்வளிக்க" என சிங்கள அதிகாரத்தினால் அடைத்து வைக்கப்பட்டிருந்த நம் இளம் சிறார்களும் என முப்பது பேர் வரை காட்டுமிராண்டித்தனமாக, வெறித்தனமாக சிங்கள மண்ணில் வேட்டையாடப்பட்டுள்ளனர். சிறீலங்காவின் புதிய சிங்கள அரசாங்கத்தின் அரங்கேற்றத்துடன் நடந்தேறியிருக்கும் இப்படுகொலைகள், 21ம் நூற்றாண்டின் முதலாவது அப்பட்டமான அரசியல் அநாகரிகமாகும்.

நாசிகள் கைதிகளை அடைத்து வைத்து நச்சுப்புகையூட்டிக் கொலை செய்ததற்கும், கடப்பாறைகள், கத்திவாள்கள் கொண்டு தமிழர் மீது சிங்களவர்கள், குரூரமாக மேற்கொண்ட இந்த இனப்படுகொலைகளுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை. இரண்டுக்குப் பின்னேயும் ஒரேவித இனவெறிச் சிந்தாந்தமே ஊடுருவி நிற்கின்றது.

தமிழ்த் தேசம் தொடர்ச்சியாகப் பெற்றுவரும் இராணுவ மற்றும் அரசியல் வெற்றிகளினாலும், எமது போராட்டத்திற்கு கிடைத்துவரும் உலக அங்கீகாரத்தினாலும் திணறி நிற்கும் சிங்கள இனவாதத்தின் கையாலாகத்தனத்தின் பல்வேறு வெளிப்பாடுகளில் இதுவுமொன்றாகும். சிறீலங்கா இராணுவத்தினதும் சிங்கள காவலர்களினதும் முற்று முழுதான கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டதன் மூலம் எதிர்காலத்தில் இன்னும் பல இனப்படுகொலைகள் நடாத்தப்படவுள்ள தெளிவான செய்தி நமக்கு விடுக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த சிறிலங்கா தேர்தலுடன் மேலும் தீவிரம் பெற்றுள்ள சிங்கள இனவாத சித்தாந்தமானது, திரட்சியடைந்து பாசிச வடிவம் பெற்றுவருவதையே பண்டாரவெல படுகொலையாயனது எடுத்துக் காட்டுகின்றது என்பதை, சர்வதேச சமூகம் இப்போதேனும் நிச்சயம் புரிந்து கொள்ளும்.

இதுவொன்றும் நமக்கு முதல் அனுபவம் அல்ல! நமது சொந்த மண்ணிலே அன்றாடம் மனிதவேட்டைகளை நடாத்துபவர்கள் தங்களது சிங்கள மண்ணில் அடைத்து வைத்துள்ள எம்மவர்களை என்ன செய்வார்கள் என்பதும், கடந்த காலங்களில் வெலிக்கடையிலும், மெகசினிலும், பூசாவிலும், களுத்துறை சிறையிலும் இன்னும் வதைமுகாம்களிலும் என்ன செய்து முடித்தார்கள் என்பதும் எம்மைப் போலவே முழுஉலகும் அறியும். ஏன், இன்னமும், இதைவிட கொடூரமாயும் வேட்டைகளை நடாத்துவார்கள் என்பது முன்னமே எச்சரிக்கப்பட்டிருந்த விடயமாகும்.

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

படிப்பகம்

www.padippakam.com

சிங்கள அரசுத் தலைமையானது ''வெளிச்சக்திகள்'' என படுகொலைப் பழியை எங்கோ போட்டு, அதற்கு விசாரணைக்குழு அமைப்பதாக தெரிவித்து தம்மை பாதுகாத்துக் கொள்ளப்பார்க்கிறது. உண்மையில், நிகழ்விற்கான முழுப்பொறுப்பினையும் சிறிலங்கா அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரதான குற்றவாளிகள் சிங்கள அரசுத் தலைவர்களும் தலைமை அதிகாரிகளுமே. குற்றவாளிகளே விசாரணைக்குழு அமைக்கும் அரசியல் நகைச்சுவையாகவே இந்த நாடகம் உள்ளது. இப்படிப்பட்ட படுகொலைக்கான மூலவித்துக்கள் அவர்களின் சிங்கள அரசியல்யாப்பில் உள்ளது. அவர்களின் அரசியல் சித்தாந்தத்தில் உள்ளது. அவர்களின் அரசியல் ஏற்பாட்டுக்குள் எமக்கு இடமில்லை என்பதுதான் இவ்வாறாக பலவித வடிவங்களில் குரூரமாக அடிக்கடி வெளிப்படுகின்றது.

ஒரு அரசியல் யாப்பு என்பது அதன் கீழ் வரும் அனைத்து மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளையும் நலன்களையும் பிரதிபலிக்க வேண்டும். அது சிறிலங்கா அரசியல் யாப்பில் அறவே இல்லை. அனைத்தும் அவர்களுக்கு மட்டுமானது என்ற இனச்சுத்திகரிப்பு கொள்கையை அது உள்ளார்ந்து சுமந்துள்ளது. இந்த ஆதிக்கச் சிந்தாந்தமே அந்த மக்களின் மனங்களுக்குள் வளர்க்கப்பட்டுள்ளது. சக சமூகத்தவர்களை சகிக்க முடியாதவர்களாக அவர்களை ஆக்கியுள்ளது. அதுவே இனவாத வடிவெடுத்து, காலத்துக்காலம் இனவெறியாகி, அவர்கள் அடையும் இன்னோரன்ன தோல்விகளுக்கெல்லாம் எம்மை இரையாக்குகின்றது. இந்த சிங்கள அரசியல் யாப்பின் மீது, அதன் சிங்களத் தன்மையின் மீதும்; சட்டப் பேராசியர்களும், புகழ்பெற்ற லிபரல்வாதிகளும் அவர்களின் அரசுத் தலைவர்களும் கைவைக்க முடியாமலிருப்பதன் பின்புலம் இதுதான்.

எனவே, இப்போது விசாரணை செய்யப்பட வேண்டியது இப்படிப்பட்ட இனவாத அரசியல் யாப்பினை சட்டத்தின்படியும், சட்டத்திற்கு புறம்பாயும் நடைமுறைப்படுத்தும் சிறிலங்கா அரசும், அதனை கைதூக்கி ஆதரிப்பவர்களும், அமுல்படுத்திக் கொண்டிருக்கும் வெறிபிடித்த அதிகாரிகளும் ஆகிய அத்தனை பேரும்தான். இந்த உண்மைக் குற்றவாளிகளை கூட்டில் ஏற்றாது, இப்படி ஆயிரம் விசாரணைக் குழுக்கள் அமைத்தாலும், உளசுத்தமாகவே விசாரணைகள் மேற்கொண்டாலும் கூட நமக்கு எந்தவித தீர்வும் கிடைக்கப் போவதில்லை. காரணம், சிங்களத்தின் அரசுத் தலைவர் கூறுவது போல குற்றவாளிகள் ''வெளிச்சக்திகள்'' அல்ல, அவை அந்த சமூகத்தினுள் புரையுண்டு போயிருக்கும் இனவாத அகச்சக்திகளே! இதில் அரசபயங்கரவாதமும் அதன் நீட்டப்பட்ட கரங்களும் அடங்கும். இதனை மறுப்பார்கள் எனின், முழு சிங்கள சமூகமே இனவெறிகொண்டதாக மாறிவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இரண்டில் எது மெய்யாயினும் இதற்கு சிறிலங்கா அரசே பொறுப்பாகும்.

ஆக, இரண்டு தேசங்களும் ஒரே அரசுக் கட்டமைப்பினுள் நீடிக்க முடியாது என்பதே யதார்த்தமாகும். எனவே எமக்கான அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்கின்றோம். அதற்கு குறுக்கே வராதீர் என உலக மக்களையும் அவர்களின் மனசாட்சியையும், சிங்கள தேசத்திலுள்ள மனிதாபிமானிகளையும் அவர்களின்

படிப்பகம்

www.padippakam.com

மனசாட்சியையும் எமது மக்களின் சார்பில் கோருகின்றோம்.

ஒருபுறம் நமது மண்ணிலே சிங்களப் படைகள் நம்மை அழித்தொழிக்க கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மறுபுறம் ஐந்தாம் படையும் கொலைப்படைகளும் கொண்டு செய்தியாளர்களும் தமிழ் தேசாபிமானிகளும் நர வேட்டையாடப்படுகின்றனர். இன்னொருபுறம், சிறிலங்காவில் நம்மவர்களை அடைத்து வைத்து கொன்றொழிப்பது என அடிக்கடி அரச பயங்கரவாதத்தின் துணையுடன் இன அழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மொத்தத்தில் சிறிலங்கா அரசின் நோக்கம் நமக்கு தெளிவாகின்றது.

எனவேதான் இந்த வகை போலி விசாரணைகள் எமக்கு அவசியமில்லை என்கின்றோம். யாரோ சில தனிப்பட்டவர்களை பிடித்து, குற்றாவளிகளாக்கி விசாரணைக்கு உள்ளாக்குவதும், பரபரப்பும் கண்டனங்களும் அடங்கியதும் படிப்படியே அவர்களை விட்டுவிடுவதும் இதற்கு தீர்வல்ல என்கிறோம். உண்மையில் விசாரிக்கப்பட வேண்டியது, கூண்டில் ஏற்றப்பட வேண்டியது, சிறிலங்கா அரசும் அதனைக் கட்டிக்காப்பவர்களும், அதற்கு உடந்தையானவர்களுமே என்கிறோம். ஆகையால், இது போன்ற விசாரணைகள் நடைபெற வேண்டியது சர்வதேச நீதிமன்றிலாகும் என்கிறோம். அதற்கும் மேலாக நீதிவிசாரணை செய்து தீர்ப்பு வழங்குவது தமிழீழத்தின் மக்கள் நீதிமன்றமாகும். இந்த விசாரணை நிச்சயம் நடைபெறும் என்பது உறுதி.

இரு தேசங்கள் என்றாகிய பின்னும், ஏற்கனவே தேசிய அளவிலான பிளவு ஆழமாகிவிட்ட பின்பும் அரசியல் ரீதியான தனித்துவம் என்பது அதன் இறுதிப் புள்ளியை வந்தடைந்துவிட்ட பின்பும் வலிந்து ஒரு கட்டமைப்பிற்குள் தீர்வு காண முயலும் சர்வதேச ஆதிக்க பிரிவுகள், இறைமை, ஒருமைப்பாடு என இல்லாத ஒன்றை, தமது நலன்களுக்கான எம்மீது திணிக்க முயலும் சர்வதேச ஆதிக்க சக்திகள், இரையாக்கப்பட்ட நம்மவர்களின் உயிர்களுக்கான பதிலைச் சொல்லட்டும். இழைக்கப்பட்ட கொடுமை உலகின் மனசாட்சியை உலுக்கட்டும். தமிழீழத்திற்கான அங்கீகாரத்தை உலக சமூகம் உடனடியாக தந்துவிடட்டும். நாம் கோருவது அதனையே, அது ஒன்றை மட்டுமே!

கொள்கை பரப்புப் பிரிவு
தமிழீழ மக்கள் கட்சி
28-10-00

தொடர்புகட்கு: *BM Box 4002, London WCIN 3XX, U. K., www.thamileelam.org, info@thamileelam.org*

படிப்பகம்